RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 240 | செப்டம்பர்.1 2025 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## நளினி சிதம்பரத்தின் உறவினர் கொலை வழக்கு: 4 பேரின் ஆயுள் தண்டனை நிறுத்திவைப்பு

திருப்பூர், செப்.1-

நளினி சிதம்பரத்தின் உறவினர் கொலை வழக்கில் 4 பேருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை நிறுத்தி வைத்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருப்பூர் ஊத்துக்குளி ரோடு கருமாரம்பாளையம் பகுதியை சேர்ந்தவர் சின்னச்சாமின் மகன் சிவமூர்த்தி (47). இவர், முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் மனைவி நளினி சிதம்பரத்தின் தங்கையான பத்மினியின் மருமகன் ஆவார்.

கடந்த 2018ம் ஆண்டு ஜூன் 25ம் தேதி காலை 11 மணிக்கு கோவை செல்வதாக கூறிச் சென்ற சிவமூர்த்தி பின்னர் வீடு திரும்பவில்லை. அவரை கோவை மாவட்டம், கணபதி மாநகரைச் சேர்ந்த விமல் (39), தேக்கம்பட்டியைச் சேர்ந்த மணிகண்டன் (25), கவுதம் (25), மூர்த்தி (40) ஆகியோர் சேர்ந்து, காரில் கடத்திச் சென்று பணம் கேட்டு மிரட்டி கொலை செய்தது தெரியவந்தது. இந்த வழக்கை விசாரித்த திருப்பூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம், 4 பேருக்கும் ஆயுள் தண்டனை வழங்கி கடந்த 2021ம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது.



இந்த தீர்ப்பை எதிர்த்து 2021ம் ஆண்டு 4 பேரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். இந்த மேல்முறையீட்டு மனுக்கள் சுமார் 4 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வந்தது. இந்தநிலையில், ஆயுள் தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும். ஜாமீன் வழங்க வேண்டும் என்றும் 4 பேர் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த நீதிபதிகள் நீதிபதிகள் எம்.ரமேஷ், வி.லட்சுமிநாராயணன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் எஸ்.துரைசாமி, வி.இளங்கோவன். எஸ்.பரணிதரன் ஆகியோரும், காவல்துறை தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஏ.தமோதரன் ஆஜராகி வாதிட்டனர். 4 பேருக்கும் ஜாமீன் வழங்கக்கூடாது. தண்டனையை நிறுத்தி வைக்கக் கூடாது என்று மூத்த வழக்கறிஞர் நளினி சிதம்பரம் ஆஜராகி வாதிட்டார்.

பின்னர் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது: குற்ற வழக்குகளில் தண்டனை பெற்றவர்களுக்கு மேல்முறையீட்டு வழக்குகளின் விசாரணையின் போது வழங்க வேண்டிய இடைக்கால நிவாரணம் தொடர்பாக உச்சநீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் தீர்ப்புகள் வழங்கியுள்ள ன. அந்த தீர்ப்புகளின்படியும், நாடாளுமன்றம், சட்டப்பேரவைகளில் இயற்றப்பட்டுள்ள சட்டங்களின் அடிப்படையிலும் மனுதாரர்களுக்கு நிவாரணம் வழங்க முடிவு செய்கிறோம்.

எனவே, மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனையை நிறுத்தி வைக்கிறோம். அவர்களுக்கு ஜாமீனும் வழங்குகிறோம். 4 பேரும் ரூ. 10 ஆயிரமும், அதே தொகைக்கு இருநபர் ஜாமீன் உத்தரவாதமும் வழங்க வேண்டும். மேல்முறையீட்டு வழக்குகள் விசாரணை முடியும் வரை, ஒவ்வொரு மாதமும் முதல் திங்கட்கிழமை திருப்பூர் நீதிமன்றத்தில் அவர்கள் ஆஜராக வேண்டும். என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

# “சமீபத்திய வெள்ளம் நாட்டு மக்களை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது”

## பிரதமர் மோடி பேச்சு

டெல்லி, செப்.1-

"கடந்த சில வாரங்களாக நாட்டில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் பெரும் அழிவு ஏற்பட்டதை நாம் பார்த்தோம். இத்தகைய இயற்கைப் பேரிடர்கள் ஒவ்வொரு இந்தியரையும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளன" என்று பிரதமர் மோடி தனது மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியில் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி மூலம் பிரதமர் மோடி நாட்டு மக்களிடையே உரையாற்றி வருகிறார். இதன் 125வது மனதின் குரல் நிகழ்ச்சி இன்று ஒலிபரப்பானது.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் மோடி, "இந்த மழைக்காலத்தில், இயற்கைப் பேரிடர்கள் நாட்டைச் சோதிக்கின்றன.



கடந்த சில வாரங்களாக நாட்டில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் ஏற்பட்ட பெரும் அழிவை நாம் கண்டோம். வீடுகள் இடிந்து, வயல்கள் நீரில் மூழ்கி, முழு குடும்பங்களும் அழிந்த சம்பவங்களும் நடந்தன.

இடைவிடாத வெள்ளப் பெருக்கால் பாலங்கள் சாலைகள் அடித்துச் செல்லப்பட்டன. மக்களின் உயிர்கள் ஆபத்தில் இருந்தன. இந்த சம்பவங்கள் ஒவ்வொரு இந்தியருக்கும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளன. தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த குடும்பங்களின் வலியை நாம் அனைவரும் பகிர்ந்து கொள்கிறோம்.

எங்கெல்லாம் நெருக்கடி ஏற்பட்டதோ, அங்கெல்லாம் நமது தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப் படை மற்றும் பாதுகாப்புப் படையினர் மக்களைக் காப்பாற்ற இரவு பகலாக உழைத்தனர். வெப் கேமராக்கள், நேரடி கண்டுபிடிப்பாளர்கள், மோப்ப நாய்கள் மற்றும் ட்ரோன் கண்காணிப்பு ஆகியவற்றின் உதவியுடன் நிவாரணப் பணிகளை விரைவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பேரிடர்களின் போது, ஹெலிகாப்டர்கள் மூலம் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன, காயமடைந்தவர்கள் விமானத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர். பேரிடர் காலங்களில் உதவ ஆயுதப்படைகள் முன்வந்தன. உள்ளூர் மக்கள், சமூக சேவையாளர்கள், மருத்துவர்கள், அரசு நிர்வாகம் ஆகியவை இந்த நெருக்கடியான நேரத்தில் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டன. இந்த கடினமான காலங்களில் மனிதநேயத்திற்கு முன்னுரிமை அளித்த ஒவ்வொரு குடிமகனுக்கும் நான் மனமார்ந்த நன்றி கூறுகிறேன்” என்று கூறினார்.

இந்த ஆண்டு பருவமழை தொடங்கியதிலிருந்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. ஜம்மு காஷ்மீர், உத்தராகண்ட், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா போன்ற மாநிலங்கள் கனமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன, இதனால் பல பகுதிகளில் நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 26 அன்று, ஜம்மு காஷ்மீரின் வைஷ்ணவி தேவி கோயில் அருகே நிலச்சரிவு ஏற்பட்டது, இதில் 30க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர், 20 பேர் காயமடைந்தனர். இமாச்சலப் பிரதேசத்தில் ஆகஸ்ட் 28 ஆம் தேதி நிலவரப்படி, நிலச்சரிவு, திடீர் வெள்ளம் மற்றும் வீடுகள் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 310 ஆக உள்ளது.

# “மக்கள் நலன் காக்க ஒரே தீர்வு... அதிமுக ஒன்றுபட வேண்டும்!”

**சென்னை, செப்.1–**

தமிழக மக்களின் நலன் காக்க ஒன்றுபட்ட அதிமுக தான் ஒரே தீர்வு என்று சசிகலா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சியினரும் பார்த்து பொறாமைப்படும் அளவுக்கு ஒளிர்ந்த நம் இயக்கம், இன்றைக்கு ஏளனமாக பேசும் அளவுக்கு இருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது.

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகிய இரு பெரும் தலைவர்கள் இல்லாத நிலையில் இன்று கட்சி பெரும் சோதனைக்கு ஆளாகி உள்ளது. கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள், விலகி இருப்பவர்கள் என அனைவரும் கரம் கோர்த்து ஒன்றிணைந்து எதிரியை வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

நம் மனமாச்சர்யங்களை மறந்து, கருத்து வேறுபாடுகளை கடந்து கட்சி, கட்சியின் நலன், கட்சியின் எதிர்காலம், கட்சியின் வெற்றி முக்கியம்,



அந்த வெற்றி திமுக என்ற தீய சக்தியை வரும் தேர்தலில் வீழ்த்துவதாக அமைவது மிக முக்கியம் என்பதை உணர்ந்து நாம் செயல்பட வேண்டிய முக்கிய தருணம் இது.

எந்த திமுகவை ஆட்சி அதிகாரத்திலிருந்தும், அரசியல் களத்திலிருந்தும் அப்புறப்படுத்த வேண்டும் என்று எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் பாடுபட்டார்களோ, அந்த திமுக மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கக்கூடிய சூழலை நாம் உருவாக்கி விடக்கூடாது.

எனக்கு நம் கட்சியினர் யார் மீதும் எந்தவித கோபமோ, வருத்தமோ இல்லை. உங்களில் ஒருத்தியாக, உங்களின் சகோதரியாக இருந்து அனைவருடன் ஒன்றிணைந்து கழகப் பணியாற்றவே நான் விரும்புகிறேன். கட்சி தொடர்ந்து தோல்விகளையே சந்தித்து வருகிறது. இதை இப்படியே இனியும் வேடிக்கை பார்ப்பது நம் இருபெரும் தலைவர்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய துரோகமாகிவிடும்.

மேலும், தமிழக மக்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய அநீதியாகிவிடும். எனவே, தமிழக மக்கள் நலன் காக்க ஒன்றுபட்ட, வலிமை மிக்க அதிமுக தான் ஒரே தீர்வு. அதைத்தான் அனைவரும் விரும்புகின்றனர்” என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு ஜெர்மனியில் உற்சாக வரவேற்பு

சென்னை, செப்.1-

ஜெர்மனி சென்றுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் வலிமையை வெளிப்படுத்த, முதலீடுகளை ஈர்க்க பெருமையுடன் முன்செல்வதாக மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடுக்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் ஜெர்மனியின் **Düsseldorf** நகருக்குச் சென்றுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இது குறித்து அரசு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டுக்கு புதிய முதலீடுகளை ஈர்ப்பதையும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களுடன் தொடர்புகொள்வதையும் நோக்கமாகக் கொண்ட 8 நாள் ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கான ஐரோப்பிய பயணத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கினார்.

டசெல்டோர்ஃப் சர்வதேச விமான நிலையத்தை அவர் வந்தடைந்தபோது, வட ரைன் வெஸ்ட்பாலியா **(NRW)** மாகாணத்தின் முதல்வர் ஹென்ட்ரிக் வூஸ்ட் சார்பாக, அவருடைய அரசின் தூதரக விவகாரங்கள் மற்றும் அரசுமுறை வரவேற்புப் பிரிவின் அன்யா டி வூஸ்ட், பெர்லினில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பொறுப்பாளர் அபிஷேக் துபே மற்றும் ஃபிராங்க்பர்ட்டில் உள்ள



இந்திய துணைத் தூதரகத்தின் பொறுப்புத் துணைத் தூதர் விபா காந்த் ஷர்மா ஆகியோர் அவரை அன்புடன் வரவேற்றனர்.

டசெல்டோர்ஃப் விமான நிலையத்திற்கு அவர் வந்தடைந்தவுடன், நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள், குழந்தைகள், சமூகத் தலைவர்கள் மற்றும் குடும்பத்தினர் மலர்கள் மற்றும் பதாகைகளை ஏந்தி உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்த வரவேற்பு, தமிழ்நாட்டின் உலகளாவிய கலாச்சாரப் பெருமையையும், ஓர் அரசியல் தலைவராக முதல்வரின் சர்வதேச மதிப்பையும் பறைசாற்றியது.

ஜெர்மனியில் அவரது பயணத்திட்டத்தின் ஒரு பகுதியாக இன்று முதல்வர், நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொள்ளும் மாபெரும் அயலக தமிழர்கள் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்க உள்ளார். இந்நிகழ்ச்சியில் ஐரோப்பா முழுவதும் உள்ள தமிழ்ச் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் பண்பாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

மேலும், தமிழ் அடையாளத்தைப் பாதுகாப்பதற்கும், தமிழ்நாட்டின் சிறப்பினை வெளிநாடுகளில் மேம்படுத்துவதற்கும் பங்களித்த ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பல தமிழ்ச் சங்கங்களை அவர் கவுரவிக்கவுள்ளார்.

திங்கட்கிழமை அன்று, முதல்வர் டசெல்டோர்ஃபில் உயர்நிலை முதலீட்டாளர் மாநாட்டிற்கு தலைமை ஏற்று, உலகளாவிய முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களுடன் நேரடியாக கலந்துரையாடுவார். இந்த நிகழ்வின் போது முக்கிய முதலீட்டு அறிவிப்புகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தமிழ்நாட்டில் முதலீடு செய்யவும், தங்கள் தொழில் திட்டங்களை விரிவுபடுத்தவும் விரும்பும் முக்கிய முதலீட்டாளர்களை முதல்வர் ஸ்டாலின் தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

இந்தியாவின் மிகவும் தொழில்மயமான மாநிலமான தமிழ்நாட்டிற்கும், ஜெர்மனியின் மிகவும் தொழில்மயமான மாகாணமான வட ரைன் வெஸ்ட்பாலியாவுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் ஒரு பகுதியாக, வட ரைன்வெஸ்ட்பாலியா மாகாண முதல்வர் ஹென்ட்ரிக் வூஸ்ட் உடன் ஸ்டாலின் சந்திப்பு நடத்த உள்ளார்.

ஜெர்மனி பயணத்திற்குப் பின், ஸ்டாலின் இங்கிலாந்துக்குச் சென்று, அங்கும் முதலீட்டாளர்கள் சந்திப்புகள், தமிழ் மக்களுடன் கலந்துரையாடல்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஜெர்மனி சென்றடைந்தது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "வணக்கம் ஜெர்மனி. இங்கே உள்ள எனது தமிழ்க் குடும்பத்தினரின் பாசத்தால் தழுவப்பட்டு, தமிழ்நாட்டின் வலிமையை வெளிப்படுத்தவும், முதலீடுகளை ஈர்க்கவும், ஒளிமயமான எதிர்காலத்திற்கான கூட்டாண்மைகளை உருவாக்கவும் நான் பெருமையுடன் முன்செல்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

## டிஎன்பிஎஸ்சி தொழில்நுட்ப பணிக்கான எழுத்து தேர்வு : விருதுநகரில் 1,343 பேர் பங்கேற்பு

விருதுநகர்: செப்.1-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிக்கான எழுத்துத் தேர்வில் விருதுநகர் மாவட்டத்தில் 1,343 பேர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் அரசு துறைகளில் காலியாக உள்ள பல்வேறு தொழில்நுட்ப பணிகளுக்கான எழுத்துத் தேர்வு தமிழகம் முழுவதும் இன்று நடைபெற்றது. நேர்காணல் அல்லாத பணிகளுக்காக இத்தேர்வு நடத்தப்பட்டது. கடந்த மே மாதம் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

விருதுநகர் மாவட்டத்தில் 7 மையங்களில் எழுத்துத் தேர்வு இன்று நடைபெற்றது. இத்தேர்வுக்கு 2,048 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 699 பேர் தேர்வெழுதவில்லை. 1,343 பேர் பங்கேற்று தேர்வு எழுதினர். தேர்வு நடைபெறுவதை கண்காணிக்க அனைத்து தேர்வு மையங்களிலும் கேமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன.


## பொறுப்பு டிஜிபியாக வெங்கடராமன் நியமனம்: தமிழக அரசு உத்தரவு


**சென்னை: செப்.1–**

பொறுப்பு டிஜிபியாக வெங்கடராமனை தமிழக அரசு நியமித்துள்ளது.

தமிழக டிஜிபியாக இருந்த சங்கர் ஜிவால் பணி ஓய்வு பெற்றுள்ளார். இதையடுத்து பணி மூப்பு அடிப்படையில் தற்போது டிஜிபிக்களாக உள்ள சீமா அகர்வால், ராஜீவ்குமார், சந்தீப் ராய் ரத்தோர் ஆகிய 3 பேரில் ஒருவர் டிஜிபியாக வரலாம் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது.

வழக்கமாக புதிய சட்டம்



ஒழுங்கு டிஜிபி பணியிடம் காலியாக உள்ள 3 மாதங்களுக்கு முன்பே தமிழக அரசு அடுத்த தகுதியான 8 பேரின் பட்டியலை மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்துக்கு அனுப்பி வைக்கும். அதில், 3 பேர் பட்டியலை ஆணையம் தமிழக அரசுக்கு மீண்டும் அனுப்பும். அதில், ஒருவரை தமிழக அரசு புதிய சட்டம் ஒழுங்கு டிஜிபியாக நியமிக்கும்.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் 8 மாதங்களில் நடைபெற உள்ள நிலையில், டிஜிபி சங்கர் ஜிவாலுக்கு பணிநீட்டிப்பு வழங்கப்படும் என முதலில் கூறப்பட்டது. ஆனால், அவர் இன்றுடன் (31ம் தேதி) ஓய்வு பெறுவது உறுதி ஆகிவிட்டது. இந்நிலையில் இந்த விவகாரத்தில் திடீர் திருப்பமாக பொறுப்பு டிஜிபியாக நிர்வாக பிரிவில் இருந்த வெங்கடராமனை தமிழக அரசு நியமிக்க முடிவு செய்தது. இதற்கான உத்தரவு இன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. வெங்கடராமன் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். 1968ல் பிறந்த இவர், 1994ல் ஐபிஎஸ் ஆக தேர்வாகி தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் பணியாற்றினார். குறிப்பாக முக்கியம் வாய்ந்த சிபிசிஐடி தலைமையிடம் மற்றும் நிர்வாக பிரிவிகளில் பணியாற்றி அரசின் பாராட்டை பெற்றவர்.

# பள்ளிக்கரணை ஜெருசலேம் பொறியியல் கல்லூரியில் தொடக்க நாள் விழா







பள்ளிக்கரணை, செப்.01-

சென்னை அடுத்த பள்ளிக்கரணை ஜெருசலேம் பொறியியல் கல்லூரியில் முதலாண்டு மாணவர்களுக்கான தொடக்க நாள் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற ஹெச்.சி.எல்.டெக் நிறுவன சர்வதேச இயக்குநர் எஸ்.கோட்டீஸ்வரன் பேசுகையில், பொறியியல் கல்வி பயிலும் மாணவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள கல்லூரியில் வழங்கப்படும் அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி, தங்கள் அறிவாற்றலை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். தொழில் நுட்பத் திறமைகளை வளர்த்துக் கொண்டு இந்திய அளவில் மட்டும ல்லாமல், சர்வதேச அளவில் வேலைவாய்ப்புகளைப் பெறும் வகையில் தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டும். அனைவரும் வேலை தேடுவோராக இல்லாமல், சொந்தமாக தொழில் தொடங்கி தொழில் முனைவோராகத் திகழ வேண்டும் என்றார் அவர். நிகழ்வில் சீமென்ஸ் நிறுவன பொதுமேலாளர் தினேஷ் பாலசுந்தரபாபு, தாகூர் கல்விக் குழுமத் தலைவர் எம்.மாலா, செயலர் ஜி.மணிகண்டன், நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.கௌரி, தலைமை நிர்வாக அதிகாரி ரக்சனா, முதல்வர் எஸ்.ரமேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மறைந்த தமிழ் மாநில காங்கிரஸ் நிறுவன தலைவர் ஜி.கே.மூப்பனார் நினைவு நாள் தாம்பரத்தில் அனுசரிப்பு





தாம்பரம், செப்.01-

மறைந்த தமிழ் மாநில காங்கிரஸ் நிறுவன தலைவர் ஜி.கே. மூப்பனார் அவர்களின் நினைவு நாளை செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் சார்பில் மாவட்டம் சார்பில் அனுசரிக்கபட்டது. மாவட்ட தலைவர் வி.என்.வேணுகோபால் தலைமையில் தாம்பரம் மாநகர பகுதியில் சண்முகம் சாலை, காந்தி சாலை, இரும்புலியூர் பேருந்து நிலையம், தாம்பரம் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் ஜி.கே. மூப்பனார் அவர்களின் திருவுருவ படத்திற்க்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து நினைவு நாள் யொட்டி தமிழ் மாநில காங்கிரஸ் இளைஞரணி தலைவர் வி.ஆர்.பி.வேல்மயில் அவர்கள் ஏற்பாட்டில் செய்யபட்ட அன்னதானம் வழங்கும் நிகழ்வில் மாவட்ட தலைவர் வி.என்.வேணுகோபால் அவர்கள் கலந்து கொண்டு பொது மக்களுக்கு அன்னாதானம் வழங்கினார். இதில் இதில், மாவட்ட பொருளாளர் ஆர்பிஎஸ். பொன்ராஜ், மாவட்ட பொது செயலாளர் கே லோகசுப்பிரமணியம், மாநில சிறப்பு அழைப்பாளர் பல்லாவரம் சி கே மூர்த்தி, எஸ் எஸ் டி பிரிவு மாவட்ட தலைவர் மின்னல் கே கந்தசாமி, தாம்பரம் பகுதி தலைவர் வி ஜெயராமன், மாவட்ட செய்தி தொடர்பாளர் ஜோசப் ராஜ் மற்றும் இளைஞர் அணி சேர்ந்த பாலாஜி பிரவீன் ஆனந்த் குமார், சஞ்சீவி மற்றும் ஏராளமான கலந்து கொண்டனர்.

வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி. வி.செல்வம் தலைமையில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி:

# வேலூர் கிருஷ்ணசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளியில் ஸ்மார்ட் கம்ப்யூட்டர் ஆய்வகம்: கலெக்டர் சுப்புலெட்சுமி திறந்து வைத்தார்



வேலூர், செப்.01-

வேலூர் கிருஷ்ணசாமி முதலியார் மேல்நிலைப் பள்ளியில் கடந்த 1990ம் ஆண்டு பத்தாம் வகுப்பு ஏ பிரிவில் ஜி.வி.செல்வம் உள்பட 76 மாணவ, மாணவிகள் பயின்றனர். 35 ஆண்டுகள் கழித்து பள்ளியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி மற்றும் ரூ.18 லட்சத்தில் 35 கம்ப்யூட்டர்களுடன் அமைக்கப்பட்ட ஸ்மார்ட் கம்ப்யூட்டர் ஆய்வகம் திறப்பு விழா ஆகியவை நேற்று பள்ளி வளாகத்தில் நடந்தது.

விழாவிற்கு பள்ளி முன்னாள் மாணவரும், வி.ஐ.டி துணைத் தலைவருமான ஜி.வி. செல்வம் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக வேலூர் மாவட்ட கலெக்டர் சுப்புலெட்சுமி கலந்து கொண்டு கம்ப்யூட்டர் ஆய்வகத்தை திறந்து வைத்து பேசுகையில்,

வி.ஐ.டி பல்கலைக்கழக துணைத்தலைவர் ஜி.வி.செல்வம் பெரிய கல்வி நிறுவனத்தை நடத்தி வந் தாலும் ,வேலூரில் கம்பன் கழகம், விளையாட்டு விழாக்கள் உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார். மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் ஆய்வகம் போன்ற நல்ல பணிகளையும் செய்து வருகிறார். இதனை பார்த்து மற்றவர்களும் தாங்கள் படித்த பள்ளிக்கு செய்ய வேண்டும். அவரை நினைத்து நான் பெருமைப்படுகிறேன்என்றார்.

முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சியில் பள்ளி செயலாளர் மணிநாதன், அறக்கட்டளை உறுப்பினர் பிரசாந்த்குமார், தலைமை ஆசிரியை கவிதா, முன்னாள் ஆசிரியர்கள் மாதவன், பாலசுப்ரமணியம் உள்பட பலர் கவுரவிக்கப்பட்டனர்.

வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் மாணவர்களுக்கு ஜெ.இ.இ., நீட் நுழைவுத் தேர்வுகளுக்கான புத்தகங்களை வழங்கி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது; நாங்கள் இந்த பள்ளியில் 35 ஆண்டுகளுக்கு முன்பு 10ம் வகுப்பு படித்தோம். நாங்கள் அப்போது எப்படி இருந்தோமோ அதே போல் தான் இப்போதும் உள்மனசளவில் இருக்கிறோம். அலெக்சாண்டர் ஒருமுறை சொல்லும் பொழுது, 'நான் பிறப்பதற்கு என்னுடைய பெற்றோர் காரணம். நான் உயர்வதற்கு காரணம் என்னுடைய ஆசிரியர்கள் காரணம்' என்றார் மாதா, பிதா, குரு. பெற்றோருக்கு அடுத்தது ஆசிரியர்கள் தான். 1986ல் கிருஷ்ணசாமி மேல்நிலைப் பள்ளியில் நான் 6ம் வகுப்பில் சேர்ந்தேன். அப்போது தென்னங்கீற்று கொட்டகை தான். அதில் தான் நாங்கள் படிப்போம். அப்போது எல்லாம் மழை பெய்தால் முட்டிங்கால் அளவுக்கு தண்ணீர் தேங்கிவிடும். அதில் நாங்கள் கப்பல் எல்லாம் விட்டு உள்ளோம். நாங்கள் படிக்கும்போது உணவு சாப்பிட கூட இடம் இருக்காது. செப்டிக் டேங்க் மேலே உட்கார்ந்து தான் சாப்பிடுவோம். செப்டிக் டேங்க் என்றால் என்ன என்று கூட தெரியாது. அதனை பார்த்து ஆசிரியர் திட்டுவார். பின்னர் சத்துணவு கூடத்தில் அமர்ந்து சாப்பிடுவோம். அப்போது எங்களுக்கு எந்த வசதியும் இல்லை.

இப்பொழுது மாணவர்களாகிய உங்களுக்கு அனைத்து வசதிகளும் உள்ளது. நாங்கள் இப்போது நல்ல நிலையில் இருப்பதற்கு ஆசிரியர்களின் கண்டிப்பு தான் காரணம்.

நாங்கள் படிக்கும் போது தவறு செய்தால் ஆசிரியர்கள் அடிப்பார்கள். அந்த பயம் இருக்கும்.

இன்றைக்கு ஆசிரியர்களை பார்த்து யாரும் பயப்படுவது இல்லை. நாங்கள் படிக்கும் போது தலைமை ஆசிரியராக இருந்த திருஞானசம்பந்தம், எங்களிடம், 'வாழ்க்கை என்பது சிறியது. இருக்கும் வரை மகிழ்ச்சியாக இருங்கள்' என்ற கருத்தை சொன்னார். அதனை இன்றளவும் நான் பின்பற்றி வருகிறேன் அதுபோன்ற தலைமையாசிரியர், ஆசிரியர்கள் இருந்ததால் தான் இப்பொழுது பள்ளி சிறப்பாக உள்ளது. வருங்காலத்தில் மாணவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று நினைத்து அதற்கான வசதிகளை பள்ளி நிர்வாகம் செய்துள்ளது. நான் அமெரிக்காவுக்கு சென்றிருந்தபோது அங்குள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் எங்களுடன் படித்த ஒரு மாணவர் தொழிலதிபராக இருப்பதை பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கூறும் பொழுது, உங்களுடைய கையெழுத்து எப்பொழுது ஆட்டோகிராப்பாக மாறுகிறதோ அப்போது நீங்கள் வெற்றி பெற்ற மனிதர்களாக மாறி விடுவீர்கள் என்றார்.

அதுபோன்ற இங்குள்ள மாணவர்கள் அனைவரும் வரும்காலத்தில் மேடையில் சிறப்பு விருந்தினர்களாக அலங்கரிக்க வேண்டும். நீங்கள் கடினமாக உழைத்தால் வாழ்க்கையில் முன்னேறலாம்.

கடின உழைப்பும், உண்மையும் இருந்தால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்றார்.

இந்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பில் துபாய், அமெரிக்கா, சிங்கப்பூர் உள்பட பல்வேறு வெளிநாடுகளில் இருந்தும் 37 மாணவ, மாணவிகள் வந்து கலந்து கொண்டனர்.

விழாவில் முதன்மை கல்வி அலுவலர் (பொறுப்பு) தயாளன், முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் மணிவண்ணன், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



# தமிழக முதலமைச்சர் கபடி போட்டியில் தாராபுரம் அரசு ஊழியர்கள் அணி முதல் பரிசை வென்றனர்

திருப்பூர், செப்.01-

திருப்பூர் மாவட்டம் சிக்கனா கல்லூரியில் கலையரங்கத்தில் றேற்று (31.08.2025) அரசு ஊழியர்களுக்கான முதலமைச்சர் கபடி போட்டியில் பத்து அணிகள் கலந்து கொண்டுதில் இறுதிப் போட்டியில் தாராபுரம் அரசு ஊழியர்கள் அணியும் மின்வாரிய ஊழியர்கள் உடுமலை அணியும் மோதிக்கொண்டதில் தாராபுரம் அரசு ஊழியர்கள் அணி முதல் பரிசு பெற்று உள்ளது. இதை அறிந்த சக அரசு ஊழியர்கள் வீரர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர்..

# இந்து புரட்சி முன்னணி தமிழ்நாடு சார்பில் விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி 1000 நபர்களுக்கு சமபந்தி அன்னதானம்



தாம்பரம், செப்.01-

இந்து புரட்சி முன்னணி தமிழ்நாடு சார்பில் ஒவ்வொரு ஆண்டு விநயாகர் சதுர்த்தி விழா வெகு விமர்சியாக கொண்டாடபட்டு வருகிறது. இந்த ஆண்டு விநாயகர் சதுர்ததி விழாவை முன்னிட்டு சண்முகம் சாலையில் விநாயகர் சிலை வைத்து தினந்தோறும் சிறப்பு பூஜைகள் நடைபெற்று வருகிறது. இந்த யிலையில் இந்து புரட்சி முன்னணி தமிழ்நாடு நிறுவனர் எம்.கே.எஸ்.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற சமபந்தி விழாவில் முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னய்யா, தாம்பரம் மாநகர மத்திய பகுதி அதிமுக செயலாளர் எல்லார். செழியன் ஆகியோர் கலந்து கொண்டு சமபந்தியில் உணவு பரிமாரினர். முன்னதாக விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களை பேண்டு வாத்தியம் முழுங்க ஊர்வலமாக அழைத்து வந்தனர். பின்னர் சண்முகம் சாலையில் விநாயகரை வழிபட்டனர். இதில் இந்து புரட்சி முன்னணி நிர்வாகிகள், அதிமுக நிர்வாகிகள் மாரி, மார்க்கெட் பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

உலகளவில் புகழ்பெற்ற வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் ஓணம் முன்னிட்டு, பாரம்பரிய வேட்டி சேலை அணிந்து ஓணம் பண்டிகை கலை நிகழ்ச்சிகளுடன் மாபெரும் கொண்டாட்டம்

# வி.ஐ.டி பல்கலைக்கழக வளாகத்தில் ஓணம் பண்டிகை விழா, தொடர்ச்சியாக கேரளா ஸ்டைல் ஓணம் பண்டிகை உணவு ஏற்பாடு ஐந்தாயிரம் பேருக்குமேல் தலை வாழை இலை உணவு அருந்தி பெருமித மகிழ்ச்சி

நாட்டிலேயே முழு எழுத்தறிவு பெற்றது கேரளா மாநிலம் தான் என விஜடி வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் புகழாரம்

வேலூர், செப்.01-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, பழைய காட்பாடி, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் விஐடி பல்கலைக்கழக வளாக, அண்ணா கூட்டரங்கில், ஓணம் பண்டிகை பெருவிழா விஐடி பல்கலைக்கழக தலைவர் வேந்தர் முனைவர் கோ விஸ்வநாதன் தலைமையில் கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக நடிகையையும், பின்னணி பாடகியுமான ரம்யா நம்பீசன், கவுரவ விருந்தினராக எழுத்தாளர் புஷ்பா குருப் ஆகியோ ர்கலந்து கொண்டு ஓ ணம் பண்டிகை பெருவி ழாவை சிறப்பித்து சிறப்புரையாற்றினர். வி.ஐ.டி பல்கலை க்கழக வளாகத்தில் ஓணம் பண்டிகை விழா, தொடர்ச்சியாக கேரளா ஸ்டைல் ஓணம் பண்டிகை உணவு ஏற்பாடு ஐந்தாயிரம் பேருக்குமேல் தலை வாழை இலை உணவு அருந்தி பெருமித மகிழ்ச்சி!!!

நாட்டிலேயே முழு எழுத்தறிவு பெற்றது கேரளா மாநிலம் தான் என விஜடி வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் புகழாரம்... நாட்டிலேயே முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக கேரளா உள்ளது என விஜடி வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் பேசினார். வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் 'தனிமா' ஓணம் பண்டிகை கொண்டாட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது அவர் பேசியதாவது; வி.ஐ.டி பல்கலைக்கழகத்தில் ஓணம் பண்டிகை 24 ஆண்டுகளுக்கு முன்பு கொண்டாடத் தொடங்கினோம். அப்போது விஜடியில் கேரளாவைச் சேர்ந்த 180 மாணவர்கள் படித்தனர். 10 ஆசிரியர்கள் பணி புரிந்தனர். இப்போது 4,160 மாணவர்கள் படிக்கின்றனர். 141 ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். கல்வியின் மையமாக



கேரளாவை கூறலாம். அந்த மாநிலம் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக திகழ்கிறது. எனக்கும், கேரளாவுக்குமான தொடர்பு 60 ஆண்டுகளுக்கு மேலானது. நான் எம்.பியாக இருந்த போது நாடாளுமன்றத்தில் ஏ.கே. கோபாலன் போன்ற தலைவர்களோடு பழகியுள்ளேன். கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றில் போராட்டத்தின் மூலம் ஆட்சிக்கு வருவார்கள். ஆனால் கேரளாவில் முதல் முறையாக தேர்தல் மூலம் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்தது. அந்தவகையில், இந்தியாவிலேயே கம்யூனிஸ்ட் கட்சி முதலில் ஆட்சி பிடித்த மாநிலம் என்றால் அது கேரளா தான். கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த இ.எம். எஸ். நம்பூதிரிபாட் தேர்தல் மூலமாக முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். கேரள மாநிலம் சிறந்த மாநிலமமாகும். அந்த மாநிலம் கல்வியிலும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்குகிறது. கடவுளின் தேசமாக அறியப்படும் கேரளா கல்வியில் முன்னணியில் உள்ளது. கேரளாவில் வேலைவாய்ப்புகள் போதுமானதாக இல்லை.

வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் 120 மில்லியன் டாலர் பணத்தை அனுப்புகின்றனர். வெளிநாடுகளுக்கு சென்று அங்கு பணிபுரிந்து இந்தியாவுக்கு பணம் அனுப்புபவர்களில் மகாராஷ்டிரா, கேரளா, தமிழகம் முன்னணியில் உள்ளது. உலகளவில் ஊழல் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 96வது இடத்தில் உள்ளது. கேரளாவில் தான் ஓட்டு போடுவதற்கு யாரும் பணம் வாங்குவதில்லை. கேரளா குறைந்த அளவில் ஊழல் உள்ளது. அங்கு வெறும் 20 சதவீத அளவுக்கு ஊழல் நடைபெறுகிறது. தமிழகத்தில் 62 சதவீதமாக ஊழல் உள்ளது. மனிதவள குறியீட்டில் இந்தியாவில் கேரளா முதல் மாநிலமாக உள்ளது. கேரளாவில் புலம்பெயர்ந்தோர் அனுப்பும் பணத்தை தொழில்துறையில் அதிக முதலீடு செய்யும்போது வேலை வாய்ப்பு பெருகும். இதன் மூலம் தொழில்துறையில் உற்பத்தி மேம்படும். இவ்விஷயத்தில் கேரளா அரசு கவனம் செலுத்த வேண்டும் என இவ்வாறு பேசினார். விஜடி துணைத் தலைவர் சேகர் விசுவநாதன் பேசும்போது, "கேரளாவில் வைக்கம் போராட்டத்தில் பெரியார் கலந்து கொண்டு சமூக நீதிக்காகப் போராடி கவனத்தை ஈர்த்தார். கேரளாவைச் சேர்ந்த எம்ஜிஆரை தமிழகத்துக்கு கொடுத்தது கேரளா தான். அவர் தமிழக முதல்வராக இருந்த போது தான் அரசு பள்ளிகளில் சத்துணவு திட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்மூலம் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கூடியது. அவர் தான் விஜடி கல்வி நிறுவனம் தொடங்க முக்கிய காரணமாக இருந்தார்" என்றார். சிறப்பு விருந்தினராக நடிகையையும், பின்னணி பாடகியுமான ரம்யா நம்பீசன், கவுரவ விருந்தினராக எழுத்தாளர் புஷ்பா குருப் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். தொடர்ந்து தனிமா கலை நிகழ்ச்சி மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அதைத்தொடர்ந்து ரம்யா நம்பீசன் மலையாளத்தில் பாடல்களை பாடி மாணவ, மாணவிகளை மகிழ்வித்தார். தனிமா நிகழ்ச்சியில் சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். விழாவில் துணைவேந்தர் காஞ்சனா பாஸ்கரன், இணை துணை வேந்தர் பார்த்தசாரதி மல்லிக், பதிவாளர் ஜெயபாரதி, மாணவர் நல இயக்குநர் நைஜு, விஜடி பல்கலைக்கழக பேராசிரியர்கள் அலுவலர்கள் பணியாளர்கள் மாணவர்கள் மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## ‘லோகா’ படத்துக்கு வரவேற்பு: படக்குழுவினர் மகிழ்ச்சி

மலையாளத்தில் ‘லோகா’ படத்துக்கு பெரும் வரவேற்பு கிடைத்திருப்பதால் படக்குழுவினர் பெரும் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள்.

துல்கர் சல்மான் தயாரிப்பில் வெளியாகியுள்ள படம் ‘லோகா சாப்டர் 1: சந்திரா’. ஓணம் பண்டிகையை முன்னிட்டு மோகன்லால் நடித்த ‘ஹ்ருதயபூர்வம்’ மற்றும் ஃபகத் பாசில் நடித்த ‘ஓடும் குதிர சாடும் குதிர’ ஆகிய படங்கள் வெளியாகின. இதில் மற்ற இரண்டு படங்களை விட ‘லோகா’ படத்துக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்திருக்கிறது.

முதல் நாளில் 250 திரையரங்குகளில் வெளியான ‘லோகா’, அடுத்த நாளில் இருந்து 325 திரையரங்குகளாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் படக்குழுவினர் பெரும் உற்சாகத்தில் இருக்கிறார்கள். வரும் நாட்களில் இன்னும் திரையரங்குகள் மற்றும் காட்சிகள் அதிகமாகும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். இந்த வரவேற்பினால் இதர மொழிகளிலும் டப்பிங் செய்யப்பட்டு வெளியாகவுள்ளது.

‘லோகா’ படத்தின் தமிழக உரிமையினை ஏஜிஎஸ் நிறுவனம் பெற்று வெளியிட்டுள்ளது. இன்று முதல் தமிழகத்தில் தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளது. இந்திய சினிமாவில், முதல் பெண் சூப்பர் ஹீரோவை அறிமுகப்படுத்தும் படமாக இது உருவாகி இருக்கிறது. டொமினிக் அருண் எழுதி, இயக்கியுள்ள இதில், கல்யாணி பிரியதர்ஷன் சூப்பர் ஹீரோவாக நடித்திருக்கிறார்.

‘பிரேமலு’ நஸ்லன், சந்து சலீம் குமார், அருண் குரியன், சாந்தி பாலச்சந்திரன் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். நிமிஷ் ரவி ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு ஜேக்ஸ் பீஜாய் இசை அமைத்துள்ளார்.



## ராஜ் ஐயப்பா ஜோடியாகிறார் ஷ்ரிதா ராவ்

அஜித்தின் ‘வலிமை’, ‘தருணம்’, ‘100’, ‘ரன் பேபி ரன்’ உள்பட பல படங்களில் நடித்திருப்பவர், ராஜ் ஐயப்பா. இவர் ஹீரோவாக நடிக்கும் படத்தை அறிமுக இயக்குநர் ராஜன் ரவி இயக்குகிறார். இதை மிஸ்டர் பிக்சர்ஸ் ஸ்டுடியோ ஆர்.ஜெயலட்சுமி மற்றும் கன்டாரா ஸ்டுடியோஸ் இணைந்து தயாரிக்கின்றன. ஷ்ரிதா ராவ் நாயகியாக நடிக்கிறார். மேலும் பிரேம்ஜி, ஸ்ரீநாத், சவுந்தர்யா சரவணன், சிபி ஜெயக்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். கிரண் குமார் ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு, பாலா சுப்பிரமணியன் இசை அமைக்கிறார். இந்தப் படத்தின் பூஜை சென்னையில் நடந்தது. படக்குழுவினருடன் சிறப்பு விருந்தினராகத் தயாரிப்பாளர் மதியழகன் கலந்து கொண்டார். படத்தின் மற்ற விவரங்கள் விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது.



## கடுக்கா — சினிமா விமர்சனம்:



குமாரபாளையம் கிராமத்தில் நண்பர்களாக இருக்கிறார்கள் சிவசாமியும் (விஜய் கவுரிஷ்), சாமிநாதனும் (ஆதர்ஷ்). வேலை ஏதுமில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கும் சிவசாமி, பேருந்து நிலையத்தில் நின்று பெண்களைப் பார்ப்பதை வேலையாகச் செய்துவருகிறார்.

பேனர் எழுதுபவரான சாமிநாதன், நினைத்தால் வேலை, இல்லை என்றால் மது என சுகமாக வாழ்ந்து வருகிறார். ஊருக்குப் புதிதாக வரும் சுமதியை (ஸ்மேகா), இருவருமே காதலிக்கிறார்கள். அவரும் இருவரிடமும் தனித்தனியாகக் காதலிப்பதாகச் சொல்கிறார். இது ஒரு கட்டத்தில் பிரச்சினையாகி விடுகிறது. சுமதி ஏன் இருவரையும் காதலிப்பதாகச் சொன்னார் , அவர் யாரைக் காதலித்தார் என்பதை அழகான மெசேஜோடு சொல்கிறது படம்.

கல்லூரி செல்லும் இளம் பெண்கள் எதிர்கொள்ளும் காதல் டார்ச்சர், காதலிக்க வற்புறுத்தும் பிரச்சினைகளை வைத்து ‘கடுக்கா’வைக் கொடுத்திருக்கிறார், அறிமுக இயக்குநர் எஸ்.எஸ். முருகராசு.

படத்தின் தொடக்கக் காட்சிகள் மெதுவாக நகர்ந்தாலும் காதல் கடிதம் கொடுத்த பிறகு நடக்கும் விஷயங்கள் கதையை இழுத்துச் செல்கின்றன. குறைந்த கதாபாத்திரங்களைக் கொண்டு, எளிமையான கதையை நேர்மையாகச் சொல்லிருக்கும் இயக்குநரைப் பாராட்டலாம். கிளைமாக்ஸில் நாயகி கேட்கும் கேள்விகள் நியாயமானதாகவே இருக்கின்றன.

மணியாக வரும் மஞ்சுநாதன், சுதாவாக வரும் ஆராயி,மணிமேகலை என அக் கதாபாத்திரங்களுக்கான நடிகர்கள் தேர்வும் அவர்களின் கொங்கு பேச்சுவழக்கும் கச்சிதம். ஒரு பெண், தங்களுக்குள் வந்த பிறகு, நண்பர்கள் எப்படி விரோதியாகிறார்கள், தங்களை எப்படி மாற்றிக் கொள்கிறார்கள் என்பதை இயல்பான காட்சிஅமைப்புகளின் வழி சொல்கிறது படம்.

நாயகர்களாக நடித்திருக்கும் விஜய் கவுரிஷ், ஆதர்ஷ் இருவரும் தங்கள் கேரக்டருக்கு நியாயம் சேர்த்திருக்கிறார்கள். நாயகி ஸ்மேகா, சின்னப் பெண்ணைப் போல தோன்றினாலும் நன்றாக நடித்திருக்கிறார்.

கெவின் டி கோஸ்டின் இசையில் தேவா பாடியிருக்கும் பாடல் படம் முழுவதும் வருவது இனிமையாக இருக்கிறது. பின்னணி இசையில் கவனம் செலுத்தி இருக்க வேண்டும். சதீஷ்குமார் துரைக்கண்ணுவின் ஒளிப்பதிவு, ஒரு கிராமத்தைக் கண் முன் கொண்டு நிறுத்துகிறது.

ஜான்சன் நோயலின் படத்தொகுப்பும் சிறப்பாக இருக்கிறது. குறைந்த பட்ஜெட்டில் உருவாக்கப்பட்டது என்பது படத்தில் தெரிந்தாலும் அது கதையை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை. இதுபோன்ற படங்களுக்குப் பார்வையாளர்கள் ஆதரவு கொடுக்கலாம்.

## தெலுங்கை விட்டு விலகிய கமாலினி

கமல்ஹாசனின் ‘வேட்டையாடு விளையாடு’ உள்பட சில தமிழ் படங்களில் ஹீரோயினாக நடித்தவர், கமாலினி முகர்ஜி. இந்தி, கன்னடம், மலையாளம், தெலுங்கு, பெங்காலி ஆகிய மொழிகளில் சில படங்களில் நடித்துள்ள அவர், 2014ல் தெலுங்கில் ராம் சரண் நடிப்பில் வெளியான ‘கோவிந்துடு அந்தரிவாடேலே’ என்ற படத்தில் நடித்த பிறகு தெலுங்கில் புதுப்படத்தில் நடிக்கவில்லை.

தமிழில் ‘இறைவி’, மலையாளத்தில் ‘புலிமுருகன்’ உள்பட சில படங்களில் நடித்த அவர், பிறகு நடிப்பை விட்டு ஒதுங்கினார். இந்நிலையில் அவர் அளித்துள்ள பேட்டியில், ‘நான் நடித்த ‘கோவிந்துடு அந்தரிவாடேலே’ படத்தின் படப்பிடிப்பு நன்றாகத்தான் நடந்தது. ஆனால், படம் ரிலீசானபோது என் கதாபாத்திரத்தை பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். படத்தில் எனது கதாபாத்திரம் முக்கியமானதாக இல்லாமல், தேவையில்லாதது போன்று இருந்தது.

எடிட்டிங்கில் அதை நீக்கிவிட்டனர். எதற்காக இதில் நடித்தோம் என்ற எண்ணத்தை அப்படம் ஏற்படுத்தி விட்டது. இதற்கு என்னுடன் நடித்த நடிகர்களோ, படக்குழுவினரோ காரணம் இல்லை. அதனால்தான் தெலுங்கு படங்களில் நடிப்பதை நான் நிறுத்திவிட்டேன்’ என்று கூறியுள்ளார்.

## ஆசிய கோப்பை ஹாக்கி: சீனாவை வீழ்த்தியது இந்தியா




ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கியில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் 4-3 என்ற கோல் கணக்கில் சீனாவை வீழ்த்தியது. கேப்டன் ஹர்மன்பிரீத் ஹாட்ரிக் கோல் அடித்தார்.

பிஹார் மாநிலம் ராஜ்கிர் பகுதியில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் தொடக்க நாளான நேற்று ‘ஏ’ பிரிவில் உள்ள இந்திய அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் சீனாவுடன் மோதியது. இதில் இந்திய அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்திய அணி சார்பில் கேப்டன் ஹர்மன்பிரீத் 20, 33 மற்றும் 47வது நிமிடங்களில் கிடைத்த பெனால்டி கார்னர் வாய்ப்புகளை கோல்களாக மாற்றினார்.

ஆனால் அதேவேளையில் அவர், பெனால்டி ஸ்டிரோக்கில் கோல் அடிக்க கிடைத்த எளிதான வாய்ப்பை தவறவிட்டார். முன்னதாக 18வது நிமிடத்தில் ஜுக்ராஜ் சிங் பெனால்டி கார்னர் வாய்ப்பில் கோல் அடித்து பலம் சேர்த்திருந்தார். 11 பெனால்டி கார்னர் வாய்ப்புகளில், நான்கை மட்டுமே இந்திய அணியால் கோலாக மாற்ற முடிந்தது சீன அணி தரப்பில் ஷிஹாவோ டு (12வது நிமிடம்), பென்ஹால் சென் (35வது நிமிடம்), ஜிஷெங் காவ் (41வது நிமிடம்) ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.


மற்ற ஆட்டங்களில் கொரியா 7-0 என்ற கணக்கில் சீன தைபேவையும், ஜப்பான் 6-0 என்ற கணக்கில் கஜகஸ்தானையும், மலேசியா 4-1 என்ற கணக்கில் வங்கதேசத்தையும் தோற்கடித்தன. இந்தியா தனது 2வது ஆட்டத்தில் நாளை ஜப்பானுடன் மோதுகிறது.

## டைமண்ட் லீக் இறுதிப் போட்டி: நீரஜ் சோப்ராவுக்கு 2வது இடம்



சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் டைமண்ட் லீக் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் ஒலிம்பிக்கில் இரு முறை பதக்கம் வென்ற இந்தியாவின் நீரஜ் சோப்ரா 85.01 மீட்டர் தூரம் ஈட்டியை எறிந்து 2வது இடம் பிடித்தார். டைமண்ட் லீக் இறுதிப் போட்டியில் நீரஜ் சோப்ரா 2வது இடத்தை பிடிப்பது இது 3வது முறையாகும். 2022ம் ஆண்டு சாம்பியன் பட்டம் வென்ற அவர், 2023 மற்றும் 2024 ம் ஆண்டுகளில் 2வது இடம் பிடித்திருந்தார்.

ஜெர்மனியின் ஜூலியன் வெபர் தனது 2வது முயற்சியில் 91.57 மீட்டர் தூரம் எறிந்து முதலிடம் பிடித்து சாம்பியன் பட்டம் வென்றார். முன்னதாக அவர், முதல் முயற்சியில் 91.37 மீட்டர் தூரம் எறிந்து அசத்தியிருந்தார்.




## கால் இறுதியில் பி.வி.சிந்து தோல்வி

உலக பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவு கால் இறுதியில் ஒலிம்பிக்கில் இரு முறை பதக்கம் வென்ற இந்தியாவின் பி.வி.சிந்து, போட்டித் தரவரிசையில் 9வது இடத்தில் உள்ள இந்தோனேஷியாவின் புத்ரி குசுமா வர்தனுடன் மோதினார். 64 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பி.வி.சிந்து 14-21, 21-13, 16-21 என்ற செட் கணக்கில் தோல்வி அடைந்தார். இதனால் உலக சாம்பியன்ஷிப்பில் 6வது முறையாக பதக்கம் வெல்லும் சிந்துவின் கனவு நிறைவேறாமல் போனது.

## ரோஹித் சர்மா கதையை முடிக்கவே ‘பிராங்க்கோ டெஸ்ட்’டா? மனோஜ் திவாரி காட்டம்



2027 உலகக் கோப்பைக்கு இந்திய அணியை கட்டமைக்கும் பணியில் உள்ள இந்திய அணி நிர்வாகம் கடினமான ஓட்டப் பந்தயமான பிராங்க்கோ டெஸ்ட்டை இப்போது அறிமுகப்படுத்துவது ரோஹித் சர்மாவை ஒருநாள் அணியிலிருந்தும் ஒழித்துக் கட்டத்தான் என்று முன்னாள் வீரர் மனோஜ் திவாரி காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

யோயோ டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு உரித்தான ஃபிட்னெஸ் டெஸ்ட் என்றால் பிராங்க்கோ டெஸ்ட் என்பது ரக்பி போட்டித் தேர்வுக்கான டெஸ்ட் ஆகும். ரக்பி போட்டிகள் குறைந்த நேரமே நடக்கும் விளையாட்டாகும். கிரிக்கெட்டில் பெரிய அளவில் மூச்சுக்குழாய் தாங்கும் டெஸ்ட்களெல்லாம் தேவையே இல்லை. இந்த காமெடி யோசனையை யார் தந்தார்கள் என்ற கேள்வி ஒருபுறமிருக்க, இந்த பிராங்க்கோ டெஸ்ட் நுரையீரலை எரித்து விடும் என்று இதனை சிறுவயதில் பயிற்சி செய்த ஜாம்பவான் ஏ.பி.டிவில்லியர்ஸூம் எச்சரித்துள்ளார்.

இந்த டெஸ்ட்டில் வீரர்கள் சுமார் 1,200 மீ தூரம் இடைவிடாமல் ஓட வேண்டுமாம். கிரிக்கெட் வீரர்கள் என்ன தடகள வீரர்களா? இப்போது இந்திய அணி நிர்வாகத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பிராங்க்கோ டெஸ்ட்டில் 2 கிமீ தூரம் வரை ஓட வேண்டுமாம். மூச்சுக்குழல் எவ்வளவு தாங்குகிறது என்ற சோதனையாம் இது. ‘இது என்ன வீரர்களுக்கு வந்த சோதனை’ என்று பலரும் அங்கலாய்த்து வருகின்றனர்.

ரோஹித் சர்மா, விராட் கோலி இன்னும் ஒருநாள் கிரிக்கெட் அணியிலிருந்து ஓய்வு பெறவில்லை. இத்தருணத்தில் இது அறிமுகப்படுத்தப்படுகிறது என்றால் இவர்களை ஒழிக்கத்தானோ என்ற ஐயமும் ஒருசேர பலருக்கும் கிளம்பியுள்ளது.

இந்நிலையில் மனோஜ் திவாரி ஆங்கில ஊடகம் ஒன்றில் கூறியது: “2027 ஐசிசி உலகக்கோப்பைத் திட்டங்களிலிருந்து விராட் கோலியை இவர்களால் ஒதுக்கி வைக்க முடியாது ஆகவேதான் ரோஹித் சர்மாவை வீட்டுக்கு அனுப்ப முடிவெடுத்து பிராங்க்கோ டெஸ்ட் அறிமுகம் செய்துள்ளார்கள் போல் நான் சந்தேகிக்கிறேன்.

நான் இந்திய கிரிக்கெட்டில் என்ன நடக்கிறது என்பதை கூர்ந்து கவனித்து வருபவன். சில நாட்களுக்கு முன்பாக அறிமுகம் செய்யப்பட்ட இந்த பிராங்கோ டெஸ்ட் ரோஹித் சர்மா போன்ற வீரர்களுக்காகத்தான் என்று நான் ஐயுறுகிறேன்.

ரோஹித் சர்மா அணியில் இருப்பது யாருக்கோ பிடிக்கவில்லை. அதனால்தான் இந்த டெஸ்ட் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஏன் உங்கள் புதிய கோச் கம்பீர் தன் பயிற்சிக்காலத்தைத் தொடங்கும் போதே பிராங்கோ டெஸ்ட்டை அறிமுகம் செய்திருக்கலாமே? இப்போது ஏன்? அதனால்தான் ரோஹித் சர்மாவை கருத்தில் கொண்டு பிராங்கோ டெஸ்ட்டை கொண்டு வந்துள்ளனர்.

இந்த பிராங்க்கோ டெஸ்ட் பின்னணியில் யார் இருக்கிறார்கள்? இப்போது ஏன்? போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடை இல்லை. ரோஹித் சர்மாவுக்கு இது கடினம். பிராங்கோ டெஸ்ட் மூலம் அவர் நிறுத்தப்படுவார் என்றே நான் சந்தேகம் கொள்கிறேன்” என்று கூறியுள்ளார் மனோஜ் திவாரி.



■ மதுரை மாவட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் உரப்பனூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் திருமங்கலம் டிஜிட்டல் சகி கிளஸ்டர் நித்திய மகராசி மற்றும் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் யசோதை சாமிநாதன் மற்றும் தன்னார்வலர்கள் பலர் சிறப்பாக பங்கேற்றனர்.





இந்து திருக்கோவில்கள் சேவா சங்கம், சென்னை, தமிழ்நாடு, இந்திய அமைப்பின் சார்பாக 2 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு

# தேசிய பொதுக்குழு, மாநில செயற்குழு மற்றும் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

பள்ளிக்கரணை, செப்.01-

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிக்கரணையில் (ஆகஸ்ட் 31) ஞாயிற்றுக்கிழமை, காலை 9 மணிக்கு, சென்னை 100. நாராயணபுரம், ஐ.ஐ.டி, காலனியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இந்து திருக்கோவில்கள் சேவா சங்கம் சென்னை, தமிழ்நாடு, இந்திய அமைப்பின் சார்பாக 2ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு தேசிய பொதுக்குழு மாநில செயற்குழு மற்றும் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நிறுவனர் மற்றும் தேசிய தலைவர். , சென்னை, வி .குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தேசிய துணைத் தலைவர்கள் : சைதை. எம். பிரஸ்கார்த்திக், திருவண்ணாமலை.,ஆர். கருப்பண்ணா ஆஸ்ரமம், கே. ஆர். மணி, ஜி.கே. திருமலை, தேசிய செயலாளர், டி.கணேசன், மாநிலத் தலைவர், வேளச்சேரி, கே .வாசு ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து தேசிய துணைத் தலைவர்கள் :

பள்ளிக்கரணை, ஆர். மகேஷ், எம். அண்ணாதுரை, தேசிய பொதுச்செயலாளர், ஜே. ரவிக்குமார், தேசிய பொருளாளர், ஜே. அருண்குமார், மாநிலத் துணைத் தலைவர்கள்: வி. கே. குமார், வேளச்சேரி, ஏ. வெங்கடேசன், இலங்கை தேசிய தலைவர், பி. பரமசிவம் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்களுக்கு சால்வு அறிவித்து மரியாதை செலுத்தி வாழ்த்துக்கள் கூறினார்கள் தமிழக அரசு அறநிலைத்துறை சார்பாக நலிவடைந்த கோயில்களுக்கு 2.5 லட்சம் நிதி உதவியை தங்களின் சங்கத்தின் மூலம் பெற்றுத் தருகிறோம் என்று நிறுவன தலைவர், வி குமார் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது நன்றி உரையாக : தேசியச் செயலாளர் :சைதை, ரத்னகுமார், மாநிலச் செயலாளர், பள்ளிக்கரணை, பி .ஜெ. விஜயகுமார், தேசிய அமைப்பாளர், காட்பாடி .,எம் .மணி குருசாமி, தேசிய சட்ட ஆலோசகர், பள்ளிக்கரணை, எம். சரவணன், தமிழ்நாடு மாநில துணைத்தலைவர், எஸ். மோகன் ராமன், தென் சென்னை மா. தலைவர், ஆர். மோகன், தென் சென்னை மா. பொ. செயலாளர், கே. மணிகண்டன், வடசென்னை மாவட்ட தலைவர், கோவிந்தராஜுலு, மத்திய சென்னை மாவட்ட தலைவர் .,கே. ரவிக்குமார், திருவள்ளுவர் மாவட்ட தலைவர், ராயபுரம்.,ரேவதி, திருவண்ணாமலை மாவட்ட தலைவர், உமா மகேஸ்வரி, மத்திய சென்னை மாவட்ட துணை தலைவர், சரோஜினி சிறப்பு விருந்தினர்கள் : கடலூர், கோட்ட பொறுப்பாளர். , வி. உலகேஸ்வரன், மாநில சேலம் கோட்ட பொறுப்பாளர், டாக்டர், எஸ். குணசேகரன், சென்னை கோட்ட பொறுப்பாளர், ஜி. செந்தில்குமார், கன்னியாகுமரி கோட்ட பொறுப்பாளர், எஸ். சுடலையாண்டி, கம்மம், தெலுங்கானா மாநிலத் தலைவர், அழகன்ஜி கணேஷ்பாபு, ஆந்திர மாநில தலைவர், எம். டி. கங்கவபிரசாத், நெய்வாந்தம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், ஆர். இரமேஷ், தொழிலதிபர் .,வேளச்சேரி, வி .மேகநாதன், பத்தணம்திட்டா., கேரளா மாநில பொறுப்பாளர், எல் .உதய கண்ணன், கர்நாடக மாநில தலைவர்,. பெங்களூர், எ. ராஜா, தேசிய ஒருங்கிணைப்பாளர், உடுமலை.,ராஜேந்திரன், தேசிய துணை தலைவர்., தென்காசி, ஷியாம் லக்ஷ்மண முதலி யார் உள்ளிட்ட இந்து திருக்கோவில்கள் சேவா சங்கத்தின் நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சமப்பந்தி விருந்து வழங்கப்பட்டது.



# வேலூர், வேலப்பாடி பெருமாள் கோயில் தெருவில் விநாயகர் சதுர்த்தி விழா

வேலூர், செப்.01-

வேலூர் மாவட்டம், வேலூர், வேலப்பாடி பெருமாள் கோயில் தெருவில் விநாயகர் சதுர்த்தி விழா, கே.பாலாஜி, கோகுல் (எ) வேட்டை, கௌதம், முருகன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.


சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் அமைச்சர் வி.எஸ்.விஜய், மாமன்ற உறுப்பினரும், அறங்காவலர் குழு உறுப்பினருமான அஸ்மிதா கோபிநாத், திமுக வட்ட பிரதிநிதி குமார், முன்னாள் பேரூராட்சி தலைவரும், பேரூராட்சி திமுக நகர செயலாளருமான அருள்நாதன், பென்னாத்தூர் பேரூராட்சி துணை சேர்மன் ஜீவசத்யராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழா குழு நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# விருதுநகரில் செயின் பறிப்பு வழக்கின் குற்றவாளிகள் உடனடியாக கைது

விருதுநகர், செப்.01-

விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.





இந்நிலையில் கடந்த 28.08.2025ம் தேதி ஆமத்தூர் காவல் நிலையம் சரகம், ஓ.சங்கரலிங்கபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிந்து வரும் நாகராணி (48) என்பவர் பள்ளிக்கு தனது இரு சக்கர வாகனத்தில் சங்கர் கணேஷ் பயர் ஒர்க்ஸ் அருகில் சென்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர்கள் பதிவு எண் இல்லாத மாருதி சுசுகி காரில் வந்து வழிமறித்து நாகராணி கழுத்தில் அணிந்திருந்த 6 பவுன் தங்க செயின், பணம் ரூ.1500 மற்றும் 2 மொபைல் போன்களை பறித்து சென்று தப்பிவிட்டனர். பின்பு நாகராணி கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை செய்து வந்த நிலையில், விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் விருதுநகர் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளர் மேற்பார்வையில் காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர் தலைமையில் தனிப்படை அமைத்து சம்பவ இடத்தில் உள்ள CCTV கேமிராக்களை ஆய்வு செய்து எதிரிகளைத் தேடி வந்த நிலையில், கிடைத்த தகவலின் படி எதிரிகள் 1. பாலகுமார் (29) முருகப்பேட்டை, திருச்சி மாவட்டம், 2. அஜித்குமார் (28), ம.பாலபட்டி, சேலம் மாவட்டம் 3.சுரேஷ் (21) திருநெல் வேலி ஆகியோர்களை திருமங்கலம் சுங்கச்சாவடி அருகே வைத்து 29.08.2025ம் தேதி பிற்பகல் கைது செய்யப்பட்டனர். பின்பு எதிரிகளை கைது செய்து விசாரணை செய்ததில் மேற்படி செயின் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வழக்கின் விசாரணையில், வழிப் பறி சம்பவத்தில் ஈடுப ட்டு, பின்னர் தப்பிச் சென்ற எதிரிகள் கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் பகுதியில் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டுள்ளது தெரியவருகிறது. தொடர் திருட்டில் ஈடுபட்ட மேற்படி எதிரிகள் காவல்துறையினரின் துரித விசாரணையில் தாமதமின்றி கைது செய்யப்பட்டுள்ளனர். பறிமுதல் செய்த சொத்தின் விபரங்கள்:

மேற்படி எதிரிகளிடமிருந்து 6 சவரன் எடையுள்ள தாலியுடன் கூடிய தங்க செயின்1, 25 பவுன் எடையுள்ள தங்க மோதிரம்1, தங்க டாலர்1, கைக்கடிகாரம்4, ஆண்ட்ராய்டு போன்2, அரிவாள்6, இரும்பு கம்பி3, பணம் ரூ.20,000/ சம்பவத்திற்கு பயன்படுத்திய Baleno நான்கு சக்கர வாகனம் ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தவுள்ளனர்.

மேலும் மேற்படி எதிரிகளை விசாரணை செய்ததில், ஓசூர் நகர் காவல் நிலையத்தில் நடந்த இரட்டை கொலைக்கு பழிக்கு பழி வாங்கும் நோக்கத்திற்காக அரிவாள் வைத்திருந்தது தெரியவந்தது. மேற்படி எதிரிகளை துரிதமாக கைது செய்ததின் மூலம் பழிக்கு பழி வாங்கும் கொலை சம்பவமானது தடுக்கப்பட்டது. மேலும் மேற்படி சம்பவத்தில் தொடர்புடைய 3 எதிரிகளை தேடி வருகின்றனர். மேற்படி செயின் பறிப்பு சம்பவம் நடந்த 24 மணி நேரத்திலேயே எதிரிகளை அடையாளம் கண்டு விரைவில் கைது செய்தும், பாதிக்கப்பட்டவரின் சொத்தை மீட்ட மெச்சதகுந்த பணிக்காக காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேற்படி சிறப்பு தனிப்படையை வெகுவாக பாராட்டினர்.

மேலும் இது போன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் மீது உரிய சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் மூலம் தண்டனைகள் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.





# வேலப்பாடி, சத்திரம் ஸ்ரீ நாகமுத்து மாரியம்மன் கோயில் தெருவில் 20ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழா

வேலூர், செப்.01-

வேலூர் மாவட்டம், வேலூர் அடுத்த வேலப்பாடி, சத்திரம் ஸ்ரீ நாகமுத்து மாரியம்மன் கோயில் தெருவில் 20ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி திருவிழா, திமுக வட்ட பிரதிநிதி குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக வேலூர் எம்.எல்.ஏ. கார்த்திகேயன், முன்னாள் அமைச்சர் வி.எஸ்.விஜய் ஆகியோர் கலந்து கொண்டு விநாயகர் சதுர்த்தி விழாவை சிறப்பித்து அன்னதானத்தை துவக்கி வைத்தனர். சிறப்பு விருந்தினர்களாக மாமன்ற உறுப்பினரும், அறங்காவலர் குழு உறுப்பினருமான அஸ்மிதா கோபிநாத், முன்னாள் பேரூராட்சி தலைவரும், பேரூராட்சி திமுக நகர செயலாளருமான அருள்நாதன், பகுதி செயலாளர்கள் சத்தியமூர்த்தி, பாலமுரளி, சுந்தர்விஜி, வார்டு செயலாளர் ராஜா, அவைத் தலைவர் குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில் பொதுமக்கள் இளைஞர்கள் மற்றும் விழா குழு நிர்வாகிகள் சுப்பிரமணி, கிருஷ்ணமூர்த்தி, மணிகண்டன் மற்றும் பலர் கலந்து கொண்டு விநாயகர் சதுர்த்தி விழாவை சிறப்பித்தனர்.



விநாயகர் சதுர்த்தி திருவிழா முன்னிட்டு

# வேலூர் எம்.எல்.ஏ. கார்த்திகேயன் தலைமையில் மாபெரும் அன்னதானம்

வேலூர், செப்.01-

வேலூர் மாவட்டம், வேலூர், வசந்தபுரம், கண்டக்டர் ஆறுமுகம் முதலியார் தெருவில் விநாயகர் சதுர்த்தி திருவிழா முன்னிட்டு, வேலூர் மாநகரத்தின் (முன்னாள்) முதல் மேயர், மாநகர திமுக செயலாளரும், வேலூர் சட்டமன்ற உறுப்பினருமான ப.கார்த்திகேயன் தலைமையில் சிறப்பு பூஜைகள் செய்து இனிப்புகள் வழங்கி, சுமார் 1000பேருக்குமேல் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் போது வேலூர் சாலையோர வியாபாரிகள் சங்கத் தலைவர் கஜா (எ) கிருஷ்ணமூர்த்தி, திமுக நிர்வாகிகள் முன்னாள் மாமன்ற உறுப்பினர் மேகநாதன், வார்டு திமுக துணைச் செயலாளர் அப்துல் ரகுமான், பாலா, மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களை கௌரவிக்கப்பட்டது. இதில் வசந்தபுரம் கண்டக்டர் ஆறுமுகம் முதலியார் தெரு, நிர்வாகிகள் வில்சன், குப்பன், பாஸ்கரன், கவினேஷ், அந்தோணிராஜ், சரண், நாகராஜ், காவியாஸ், மகேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# வேலூர் சாலையோர வியாபாரிகள் சங்க தலைவர் கஜா (எ) கிருஷ்ணமூர்த்தி தலைமையில் வசந்தபுரம் ஆறுமுகம் முதலியார் தெருவில் விநாயகர் சதுர்த்தி திருவிழா மற்றும் அன்னதான விழா

வேலூர் எம்.எல்.ஏ. கார்த்திகேயன் பங்கேற்று அன்னதானத்தை துவக்கி வைத்து சிறப்பிப்பு

வேலூர், செப்.01-

வேலூர் மாவட்டம், வேலூர் கஸ்பா, வசந்தபுரம், கண்டக்டர் ஆறுமுகம் முதலியார் தெருவில் விநாயகர் சதுர்த்தி திருவிழா முன்னிட்டு, வேலூர் சாலையோர வியாபாரிகள் சங்கத் தலைவர் கஜா (எ) கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், வசந்தபுரம் கண்டக்டர் ஆறுமுகம் முதலியார் தெரு, நிர்வாகிகள் வில்சன், குப்பன், பாஸ்கரன், கவினேஷ், அந்தோணிராஜ், சரண், நாகராஜ், காவியாஸ், மகேஷ் ஆகியோர் முன்னிலையிலும் விநாயகர் சதுர்த்தி விழா கோலாகலமாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக, வேலூர் மாநகரத்தின் (முன்னாள்) முதல் மேயர், மாநகர திமுக செயலாளரும், வேலூர் சட்டமன்ற உறுப்பினருமான



ப.கார்த்திகேயன் கலந்து கொண்டு சிறப்பு பூஜைகள் செய்து, இனிப்புகள் வழங்கி அன்னதானத்தை துவக்கி வைத்தனர். இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர் எம்எல்.ஏ.வுக்கும் சாலையோர வியாபாரிகள் சங்க தலைவருக்கும் விழா குழு நிர்வாகிகளுக்கும், விழா குழு நிர்வாகிகள் சார்பில், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது திமுக நிர்வாகிகள் முன்னாள் மாமன்ற உறுப்பினர் மேகநாதன், வார்டு திமுக துணைச் செயலாளர் அப்துல் ரகுமான், பாலா, மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் இப்பகுதிமக்கள் மற்றும் இளைஞர்கள், பக்தர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# விநாயகர் சதுர்த்தி விழா முன்னிட்டு மக்களுக்கான மக்கள் இயக்கம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஒருங்கிணைந்த மொபைல் சங்கம் சார்பில் இலவச பொது மருத்துவ முகாம்

குரோம்பேட்டை, செப்.01-

விநாயகர் சதுர்த்தி விழா முன்னிட்டு மக்களுக்கான மக்கள் இயக்கத்தின் ஸ்தாபக தலைவர் யந்திராலய நாணல் குருஜி சக்தி ஸ்ரீ வீரமணி சுவாமிகளின் வழிகாட்டுதல் படி அனைவருக்கும் ஆரோக்கியம் என்ற உன்னதமான நோக்கத்துடன் மக்களுக்கான மக்கள் இயக்கம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஒருங்கிணைந்த மொபைல் சங்கம் சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் குரோம்பேட்டை பாரதிபுரத்தில் நீர்மோர் வழங்கி 30.08.2025 அன்று நடைபெற்றது. இம்முகாமிற்கு மக்களுக்கான மக்கள் இயக்கம் மற்றும் பொதுச் செயலாளர் முனைவர் தி.கார்த்திக் கண்ணன் தலைமையில் நடைபெற்றது, மூத்த சமூக ஆர்வலர் முனைவர் சந்தானம் அவர்கள் துவக்கி வைத்து, செங்கல்பட்டு மாவட்ட ஒருங்கிணைந்த மொபைல் சங்கம் கூட்டமைப்பு தலைவர் ஆர்.பாலாஜி, முன்னிலையில், நரேந்திரன் ஜி, சங்கர் ஜி ஆகியோர் வழங்கி செயலாளர் அப்துல் காதர், மக்களுக்கான மக்கள் இயக்கம் துணை ஒருங்கிணைப்பாளர் லயன் வரதன் ஒருங்கிணைப்பில், ரியாஸ் அகமது, ஜெயா கிருஷ்ணன் வரவேற்பில், ஆர். கிருஷ்ணன், கொள்கை பரப்புச் செயலாளர் கே.முகுந்த ராவ், ஆர்கே.துளசிதரன், ஆர்கே.பூபதி, நா.சந்தோஷ் குமார், ஜானகிராமன், பாபு ஆகியோரின் ஒத்துழைப்புடன், மருத்துவர் செல்வி வி.குணசுந்தரி, மருத்துவர் செல்வி புவனேஸ்வரி ஆகியோரின் மருத்துவ சேவையில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு ஆலோசனை மற்றும் சிகிச்சை பெற்றனர். நிகழ்ச்சிக்கு ஆதரவளித்த அனைத்து நல் உள்ளங்கள் மக்களுக்கான மக்கள் இயக்கம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஒருங்கிணைத்த மொபைல் சங்கம் நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்படுகிறது. மருத்துவ முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் மருத்துவம் மருந்து உட்பட இலவசமாக வழங்கப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161